## சுருக்கம்

நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டம் ரூ. 550 கோடியில் 2008–2009 முதல் 2012–2013 வரையிலான ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2011–2012 ஆம் ஆண்டு பெருந்திட்டத்தில் மாறுதல் – 2011–2012 ஆம் ஆண்டில் ரூ.2513.52 இலட்சங்களுக்கு 5 புதிய திட்ட பணிகளை நீர்வள ஆதாரத் துறை, மண்டல தலைமைப் பொறியாளர்கள் மூலம் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## பொதுப்பணித் (ஆர்.2) துறை

**அரசாணை (நிலை) எண்.220** **நாள்: 01.11.2011**
**ஐப்பசி–15, திருவள்ளுவராண்டு 2042**

**படிக்க:**

1. அரசாணை(நிலை) எண். 198, பொதுப்பணி(ஆர்.2)துறை, நாள் 10.6.2008.
2. அரசாணை (நிலை) எண்.60, பொதுப்பணித்துறை, நாள் 28.2.2011.

**மீண்டும் படிக்க:**

3. தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், தரமணி, சென்னை–113 கடித எண்.ட்டி6/எப்.104/RWH/2008, 12.1.2011 மற்றும் 13.1.2011.
4. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5 கடித எண்.எப்.1/ARS/5445-2010, நாள் 20.1.2011.
5. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, கடித எண்.எஸ்7(2)/55310/2008, நாள் 25.1.2011.

*****

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்ட மன்ற பேரவையில் 26.8.2011 அன்று பொதுப்பணித்துறை மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்ட தடுப்பு அணைகள், கசிவுநீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் போன்ற 102 கட்டுமானங்களை ரூபாய் 49.00 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தவும் நிலத்தடி நீர் இருப்பை மேம்பாடு செய்யவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**2.** இதனைத் தொடர்ந்து, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்ட **102** கட்டுமானங்களை ரூ. **49.00** கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

**3.** இதனடிப்படையில், **2011–2012** நடப்பு நிதியாண்டில் ரூ.**1151.81** இலட்சங்கள் மதிப்பீட்டிலான **5** புதிய திட்ட பணிகளை நீர்வள ஆதாரத் துறை, மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் மூலம் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மதிப்பீடுகளை அரசாணை (நிலை) எண்.**198**, பொதுப்பணித்துறை, நாள் **10.6.2008**ல் பத்தி **4** (**II**)ல் குறிப்பிட்டுள்ளவாறு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது **2009–10** மற்றும் **2010–11**ற்கான செயல்திட்டத்திற்கு (Action Plan) உரிய மாற்றங்கள் தேவைப்படின், அதற்கேற்றார்போல் மாற்றியமைக்க தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால், பெருந்திட்டத்தில் சில மாறுதல்கள் செய்து மதிப்பீடுகளை அனுப்பி அரசின் ஒப்புதல் கோரியுள்ளார். முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை இக்கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

**4.** நடப்பு நிதியாண்டில் செயற்கை முறையில் நிலத்தடிநீர் செறிவூட்ட ரூபாய் **1.00** கோடிக்கு மேற்பட்ட ரூ.**2513.52** இலட்சங்கள் (ரூபாய் இருபத்தைந்து கோடியே பதிமூன்று இலட்சத்து ஐம்பத்தி இரண்டாயிரம் மட்டும்) மதிப்பீட்டிலான **5** புதிய திட்ட பணிகளை மண்டல தலைமைப் பொறியாளர்கள் மூலம் செயல்படுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் அனுப்பியுள்ள மதிப்பீட்டுகளுடன் கூடிய கருத்துருவிற்கு ஒப்புதல் கோரி அரசுக்கு அனுப்பியுள்ளதை இணைப்பில் உள்ளபடி அதனதன்படி பிரித்து செயல்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4–**ல் அனுமதிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: **–**

> ‘‘**4702–00.** சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு **– 102.** நிலத்தடி நீர் **–** பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்**–** II. மாநிலத்திட்டம் - JD. செயற்கை முறையில் நிலத்தடி நீரினை சேகரிப்பதற்கான கட்டமைப்புத் திட்டம் **– 16.** பெரும்பணிகள் (த.தொ.கு.**4702–00–102–JD–1609)**’’

**6.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ‘‘புது துணைப் பணி (New Instrument of Service)” குறித்ததாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது**–1)** த்துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது**–1)** த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும்

மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை **2011–2012** ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி (வ.செ.பொது–**1** / பொ.ப.**2**)த்துறைக்கு தவறாமல் அனுப்புமாறு தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** மேலும், எதிர்பாரா செலவினங்கள் (Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள் (Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள் (Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான செலவினத்தில் **2.5**%-க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

**8.** இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.**47942**/பொ.ப.II/2011, நாள் **3.10.2011**–ல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.**600** (அறு நூறு) உடனும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–**5**.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–**5**.
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்), தரமணி, சென்னை –**113**.
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர், காஞ்சிபுரம், இராமநாதபுரம், விருதுநகர்.
மாநில கணக்காயர், சென்னை–**18**/ பெயரில்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – **5**.
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, சென்னை–**25**.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–**9**.
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – **9**.
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–**9**.
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை–**5**.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை–**35**.
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், வனத்துறை, சென்னை–**6**.
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்), சென்னை–**9**.
நகல்
நிதி (வ.செ.பொது. I மற்றும் II) / (பொ.ப.II) துறை / வேளாண்மை/சுற்றுச் சூழல்/
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை –**9**.
இ.கோ/உ.கோ.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**

# இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.220, பொதுப்பணித்துறை, நாள் 01.11.2011

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | பெருந்திட்டத்தில் உள்ள குறிப்பு (இருப்பின்) | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | திருவள்ளூர் | திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஜகன்னாதபுரத்தில் காரனோடை பாலம் அருகில் இருளிப்பட்டு கிராமம் அருகே கொசஸ்தலையாற்றின் குறுக்கே கலிங்கு (weir) அமைத்தல் | புதிய திட்டம் | 620.00 |
| 2 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம், உத்தரமேரூர் வட்டம், திருமுக்கூடல் கிராமம் அருகில் செய்யார் ஆற்றின் குறுக்கே தரை கீழ் தடுப்பு சுவர் அமைத்தல் | புதிய திட்டம் | 183.52 |
| 3 | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டம் பெரும்பாக்கம் கிராமம் பாலாறு ஆற்றின் குறுக்கே தரை கீழ் தடுப்பு சுவர் அமைத்தல் | புதிய திட்டம் | 268.00 |
| 4 | இராமநாதபுரம் | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், குனப்பனேந்தல் கிராமம் அருகே வைகை ஆற்றின் குறுக்கே பார்த்திபனூர் கதவணையின் கீழ் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 852.00 |
| 5 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், நாகலாபுரம் கிராமத்தின் அருகே வைப்பாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 590.00 |
| | | **மொத்தம்** | | **2513.52** |

எம். சாய் குமார்
அரசு செயலாளர்

**/உண்மை நகல்/**

பிரிவு அலுவலர்.